டிஜிட்டல் டெய்லி
# அக்ரி-டாக்டர்
agridoctor.in
agridoctor.in | 01.01.2025 புதன்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 161 - Madurai | Online Edition

கல்யாண் ஜுவல்லர்ஸ்

# தமிழகத்தில் பொங்கல் பண்டிகை வரை மழை நீடிக்கும்

## வானிலை ஆய்வு மையம் இயக்குநர் தகவல்

சென்னை, டிச.31

தமிழகத்தில் பொங்கல் பண்டிகை வரை மழைக்கு வாய்ப்பு உள்ளதாக தென்மண்டல வானிலை ஆய்வு மையம் இயக்குநர் பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று செய்தியாளர்களை சந்தித்த போது அவர் கூறியதாவது,

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்



வடகிழக்கு பருவமழை நிறைவு பெறவில்லை. பொங்கல் வரை மழை இருக்கும் என்றார். 2024ல் 4 புயல்கள் ஏற்பட்டதாகவும், கடந்த ஆண்டைவிட இம்முறை 143 மி.மீ. மழை அதிகம் பெய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், தமிழகத்தில் வருகிற 6ம் தேதி வரை மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவித்துள்ளது.




# எஸ்ஆர்எம் கல்லூரி மாணவர்கள் சார்பில் ஊர் பொது மக்களுக்கு பயிற்சி

செங்கல்பட்டு, டிச.31

செங்கல்பட்டு மாவட்டம் வெடால் ஊராட்சியில் எஸ்ஆர்எம் கல்லூரி மாணவர்கள் சார்பில் மாடி தோட்டம் பற்றிய பயிற்சி நடைபெற்றது.



எஸ்.ஆர்.எம் வேளாண் அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் ஜவஹர்லால் உதவி பேராசிரியர்கள் ராஜசேகரன், முகமது இக்ஷானுல்லா, நவீன்குமார் குங்கும செல்வன், சஸ்மிதா கணேமூர்த்தி ஆகியோரின் தலைமையில் இடைக் கழிநாடு பேரூராட்சியில் கிராமப்புற பணி அனுபவத் திட்டத்தில் தங்கி இருக்கும் ரோஜர்ஸ் குழுவை சேர்ந்த 11 மாணவர்கள் இந்த பயிற்சியை ஏற்பாடு செய்தனர். பேராசிரியர் ராஜிவ் மாடி தோட்டம் பற்றி ஊர் பொதுமக்களுக்கு சிறப்புரை ஆற்றினார். இதில் மக்கள் நலப்பணியாளர் முத்தமிழ் பாக்கியநாதன் மகளிர் சுய உதவிக் குழுவை சேர்ந்த குழு உறுப்பினர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

## மிட்டாய்கள் தயாரிக்கும் பயிற்சி

கோயம்புத்தூர், டிச.31

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மிட்டாய்கள் தயாரிக்கும் பயிற்சி வருகிற 3.1.2025ஆம் தேதியில் நடைபெறுகிறது. சாக்லேட் மற்றும் மிட்டாய் வகைகளுக்கு தற்பொழுது மக்கள் மத்தியில், அதிக வரவேற்பு உள்ளது. அதற்கான முக்கியக் காரணம் விரும்பத்தக்க வகையிலும் பற்சுவைகளிலும் மிக எளிதில் இவை கிடைப்பதேயாகும். இந்தப் பயிற்சி சிறு தொழில் முனைவோருக்கு தங்களது வருமானத்தைப் பெருக்க பெரிதும் உதவியாக இருக்கும்.

எனவே, பயிற்சியின் போது கீழ்க்காணும் சாக்லேட் மற்றும் மிட்டாய் வகைகள் எளிய முறையில் தயாரிப்பதற்கான தொழில் நுட்பப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அவையாவன :

- சாக்லேட்
- கடலை மிட்டாய்
- சர்க்கரை மிட்டாய் வகைகள்

இத்தொழில்நுட்பத்தில் ஆர்வமுள்ளவர்கள் ரூ.750/- + GST 18% செலுத்தி தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளலாம்.

பயிற்சியானது அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (வாயில் எண்.7, மருதமலை சாலை) கோயம்புத்தூர்- 641 003ல் நடைபெறும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003, தொலைபேசி எண் : 94885 18268, மின்னஞ்சல் : phtc@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# நெற்பயிரில் வேளாண் சூழலியல் குறித்த பகுப்பாய்வு

மதுரை, டிச.31

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் வட்டாரத்தில் தண்டலை கிராமத்தில் நெல் வயலில் வேளாண் சூழலியல் பகுப்பாய்வு ஆய்வு பற்றிய களப்பயிற்சி அளிக்கப்பட்டது.

## வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்



அலங்காநல்லூர் வேளாண்மை உதவி இயக்குநர் பெ.தெய்வேந்திரன், பூச்சி நோய் தாக்காத தரமான அரசு சான்று பெற்ற விதைகளை பயன்படுத்த வேண்டும் எனவும், உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா, பொட்டாஷ் பாக்டீரியா, ஜிங் பாக்டீரியா, உயிர் பூஞ்சான கொல்லி களான டிரைக்கோடெர்மா விரிடி, சூடோமோனஸ் அகியவை பயன்படுத்துதல், பயன்படுத்தும் முறைகள், அதன் பயன் பாடுகள் குறித்து விவசாயிகளுக்கு தெளிவாக எடுத்துரைத்தார்.

பயிற்சியில் மதுரை மாவட்ட உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வக வேளாண்மை அலுவலர் ஜெயந்தி ஆலோசனை வழங்கினார். மேலும் பயிர்களை தாக்கும் பூச்சி மற்றும் நோய்களை அடையாளம் காணுதல், அதனை கட்டுப்படுத்தும் முறைகள், வயலில் காணும் நன்மை செய்யும் பூச்சிகளை பாதுகாத்தல், வயல்வெளிகளில் விளக்கு பொறிவைத்தல், இனக்கவர்ச்சி




பொறி வைத்தல், டி வடிவ குச்சிகள் வைத்தல், பயிர் பொருளாதார சேத நிலைகளுக்கு அதிகமான நிலையில் இயற்கை பூச்சிக் கொல்லிகளை பயன்படுத்துதல், இரசாயன உரங்களை பகிர்ந்தளித்தல், வரப்புகளில் உளுந்து, பச்சைப் பயிறு, தட்டைப்பயறு போன்றவை சாகுபடி செய்தல், பயிர் சுழற்சி முறைகள் கையாளுதல் போன்ற இயற்கை சூழலை பாது காக்கும் முறைகளுடன் சாகுபடி செய்தல் அவசியம் என்பதை பயிற்சியில் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது.

பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் விக்னேஸ் ஏற்பாடு செய்திருந்தார். பயிற்சியில் வேளாண்மை அலுவலர் மு.வசந்தகுமார், அட்மா தொழில்நுட்ப பணியாளர்கள் வேல்முருகன், வசந்தி, சௌந்தரராஜன், பயிர் அறுவடை பணியாளர் கௌசல்யா, தண்டலை கிராம முன்னோடி விவசாயிகள் வீரணன், கிருஷ்ணன், பாலு, ராஜராஜன், லீலாவதி உட்பட விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

| கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் | | | | | | | 31.12.2024 |
|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| 1 | கத்திரி(Hybrid) | 35 | 38 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 35 | 40 | 57 | உருளை (பிற) | 30 | 36 |
| 1B | கத்திரி(Nadu) | 50 | 54 | 57A | உருளை(ஊட்டி) | 36 | 48 |
| 2 | வெண்டை | 40 | 46 | 58 | மேரக்காய் | 22 | 26 |
| 3 | தக்காளி (நாடு) | 15 | 18 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 34 | 38 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 14 | 17 | 60 | கேரட் | 50 | 55 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 65 | 68 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 60 | 70 |
| 6 | புடலை | 28 | 32 | 62 | நூல்கோல் | 40 | 46 |
| 7 | பீர்க்கன் | 45 | 50 | 63 | டர்னிப் | 35 | 40 |
| 8 | சுரைக்காய் | 25 | 28 | 64 | மு.கோஸ் | 25 | 28 |
| 9 | பாகற்காய் | 38 | 42 | 65 | மு.கோஸ்(கலர்) | | |
| 10 | கொத்தவரை | 40 | 44 | 66 | காளிபிளவர் | 44 | 48 |
| 11 | பூசணி | 14 | 16 | 67 | பட்டாணி | 80 | 88 |
| 12 | அரசாணி | 16 | 20 | 68 | பூண்டு | 200 | 288 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 40 | 46 | 69 | இஞ்சி | 46 | 90 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 50 | 55 | 70 | புருக்கோலின் | 130 | 140 |
| 15 | சி.வெங்காயம் | 65 | 70 | 71 | பென்னி பீன்ஸ் | 60 | 70 |
| 16 | பெ.வெங்காயம் | 32 | 37 | 72 | குடமிளகாய் | 60 | 65 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 35 | 40 | 73 | ஊட்டி அவரை | 100 | 130 |
| 18 | பச்சை மொச்சை | 50 | 60 | 74 | பஜ்ஜி மிளகாய் | | |
| 19 | முருங்கை | 110 | 130 | 71A | | | |
| 20 | தேங்காய் | 55 | 60 | | | | |
| 21 | மாங்காய் | 70 | 80 | | | | |
| 22 | வாழைக்காய் | 30 | 34 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 40 | 42 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 55 | 60 | 75 | எலுமிச்சை | 60 | 65 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 40 | 50 |
| 26 | மரவள்ளி | 25 | 30 | 77 | சப்போட்டா | 45 | 50 |
| 27 | சர்க்கரைவள்ளி | 40 | 45 | 78 | பப்பாளி | 30 | 34 |
| 28 | கறிவேப்பிலை | 70 | 74 | 79 | மாதுளை | 120 | 180 |
| 29 | கொத்தமல்லி | 30 | 35 | 80 | திராட்சை | 60 | 70 |
| 30 | புதினா | 8 | 9 | 81 | மாம்பழம் | 150 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 18 | 20 | 82 | ஆப்பிள் (சிம்லா/காலா) | 140 | 200 |
| 32 | தண்டுக்கீரை | 18 | 20 | 83 | ஆரஞ்ச் | 50 | 70 |
| 33 | சுக்கிட்டி&பாலாக்கு | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 60 | 70 |
| 34 | அரைக்கீரை | 18 | 20 | 85 | அன்னாசி பழம் | 50 | 55 |
| 35 | சிறுகீரை | 18 | 20 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | வெந்தயக்கீரை | 20 | 25 | 87 | முலாம்பழம் | 45 | 50 |
| 37 | பருப்புக்கீரை | 18 | 20 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 40 | 46 |
| 40 | கோவக்காய் | 54 | 58 | 91 | பூவன் | 35 | 38 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 45 | 50 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 35 | 38 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 30 | 35 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 20 | 25 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 28 | 32 | 96 | நேந்திரன் | 70 | 74 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 44 | 48 | 97 | செவ்வாழை | 70 | 80 |
| 47 | சுண்டக்காய் | 150 | 160 | 98 | பேரிக்காய் | 150 | 165 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | | |
| 49 | காளிபிளவர் (உள்ளூர்) | | | 100 | கறிப்பலா | 40 | 44 |
| 50 | நிலக்கடலை | 60 | 64 | 101 | டிராகன் ப்ரூட் | 140 | 150 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 70 | 78 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 40 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 32 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 35 | 38 | | | | |
| 55A | துவரை | 55 | 60 | | | | |

# பூச்சி மற்றும் நோய் மேலாண்மை குறித்து நடராஜபுரம் விவசாயிகளுக்கு பண்ணைப் பள்ளி பயிற்சி



திருச்சி, டிச.31

திருச்சி மாவட்டம், திருவரம்பூர் வட்டாரத்தில் வேளாண்மை துறையின் மூலம் செயல்படும் அட்மா திட்டத்தின் கீழ் நடராஜபுரம் கிராம விவசாயிகளுக்கு பாரம்பரிய நெல் இரகங்கள் சாகுபடி பண்ணைப்பள்ளி பயிற்சி நடத்தப்பட்டது.

இப்பயிற்சியில் வேளாண்மை உதவி இயக்குனர் சுகன்யா தேவி தலைமை வகித்து துறை சார்ந்த திட்டங்களான, கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம், நுண்ணீர் பாசன திட்டம் மற்றும் நீர்வள நிலவள மேம்பாட்டு திட்டம் குறித்து விவசாயிகளுக்கு விளக்கி கூறினார்.

வேளாண்மை கல்வி நிறுவனம் குமுளூர் பூச்சியியல்துறை உதவி பேராசிரியர், விஜய் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு கதிர் உருவாகும் பருவத்தில் தாக்கும் பூச்சிகள் மற்றும் நோய்கள் கண்டறிதல் மற்றும் ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு முறைகள், பொதுவான இலைவழி தெளிப்பு உரம் இடுதல், வயல்வெளியில் நன்மை தரும் மற்றும் தீமை தரும் பூச்சிகளை கண்டறிந்து அதன் முக்கியத்துவத்தை பற்றி விரிவாக விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுபாதேவி அட்மா திட்ட செயல்பாடுகள், உயிர் உரங்களின் முக்கியத்துவம் மற்றும நெல் நுண்ணூட்டசத்தின் பயன்பாடு குறித்து எடுத்து கூறி நன்றி உரையாற்றினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் சரஸ்வதி, நீலகண்டன் செய்திருந்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# WISH YOU HAPPY NEW YEAR



# ஒவ்வொரு விவசாயிக்கும் ஒரு அடையாள எண் விரைவில் பதிவு துவக்கம்



பெரம்பலூர், டிச.31

ஒவ்வொரு விவசாயிக்கும் ஒரு அடையாள எண் ஏற்படுத்துவதற்கான பதிவு விரைவில் நடைபெற உள்ளது.

இது குறித்து பெரம்பலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் பாபு வெளியிட்ட அறிக்கையில், வரும் ஜனவரி மாதத்தில் முதல் வாரத்தில் அனைத்து வட்டாரத்தில் விவசாயிகளின் பதிவு அதாவது ஒவ்வொரு விவசாயிக்கும் ஒரு அடையாள எண் ஏற்படுத்துவதற்கான பதிவு நடைபெற உள்ளது.

மேலும் வட்டாரத்தில் உள்ள ஒவ்வொரு வருவாய் கிராமத்திற்கும் ஒரு தேதி ஒதுக்கப்பட்டு அந்த நாட்களில் நமது வேளாண்மை துறையைச் சார்ந்த அலுவலர்கள் மற்றும் சி ஆர் பி பணியில் உள்ள அலுவலர்களும் தங்கள் பகுதிக்கு வர உள்ளார்கள். அது சமயம் நமது விவசாயிகள் தங்களுடைய விபரங்களை கூறி அடையாள எண் ஏற்படுத்த உதவிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் இந்த அடையாள எண் ஒவ்வொரு விவசாயிக்கும் ஆதார் எண் போன்றது. இந்த அடையாள எண்ணை வைத்துத் தான் வரும் காலங்களில் விவசாயத் துறையிலோ அல்லது விவசாயம் சார்ந்த தொழில்களுக்கு தேவையான நலத் திட்டங்களை பெறுவதற்கோ விவசாயத் துறையில் பயன்படுத்தப் படும். செலவினங்களுக்காக வங்கியில் கடன் பெறுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

எனவே அனைத்து விவசாயிகளும் தவறாது தங்கள் பகுதியில் நடைபெறும் முகாமில் கலந்து கொண்டு தங்கள் விவரங்களை கொடுத்து விவசாயிகளுக்கு ஆன அடையாள எண் ஏற்படுத்த உதவிடுமாறு உங்கள் அனைவரையும் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தின் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

அனைத்து வட்டாரத்திலும் இது போல அடையாள எண் வழங்க உள்ளதால் விவசாயிகள் தங்களது பகுதி உதவி வேளாண்மை அலுவலர், உதவி தோட்டக்கலை அலுவலர், அணுகி மேற்கூறிய தகவல் கேட்டு தெரிந்து கொள்ளலாம் என்பதை வேளாண் இணை இயக்குனர் பாபு அதில் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக நேற்று நடைபெற்ற வேளாண்மை இயக்குனர் நடத்திய கண்ணொளி காட்சியில் வேளாண் இணை இயக்குனர், வேளாண் துணை இயக்குனர், வேளாண் உதவி இயக்குனர்கள், வேளாண்மை அலுவலர்கள் மற்றும் துணை வேளாண்மை அலுவலர் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர் தோட்டக்கலை துறை அலுவலர்கள் மற்றும் சகோதரத்துறை அலுவலர்கள் மற்றும் வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டார்கள்.




# உர பயன்பாடு பற்றிய வெளிவளாக பயிற்சி

கடலூர், டிச.31

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலையம் மற்றும் தேசிய உர நிறுவனம் நடத்திய வெளி வளாக பயிற்சி நல்லூர் வட்டாரத்தை சார்ந்த திருமலை அகரம் கிராமத்தில் 31.12.24 அன்று திட்ட ஒருங்கிணைப்பாளர் / முனைவர் க.நடராஜன், துவக்கி வைத்து உரங்கள் பயன்பாடு பற்றி விளக்கினார். நீரில் கரையும் உரங்கள் கலப்பு உரங்கள் மற்றும் கம்போஸ்ட், சிட்டி கம்போஸ்ட் போன்ற இயற்கை உரங்கள் பற்றி வட்டார அலுவலர் ரகுபதி ராஜாவால் தெளிவாக விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.




மேலும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியிட்ட நீரில் கரையும் உரம் பற்றியும் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது. இதில் உயிர் உரங்கள் பயன்படுத்தும் முறையினையும், வேர் உட்பூசணம் ஆகியவற்றை பயன் படுத்தும் முறையினையும் முறையாக மருதாம்புகரும்பில் மேற்கொள்ள வேண்டிய உரங்கள் கிடைக்கும் இடத்தைப் பற்றியும், தேசிய உர நிறுவனத்தின் மூலம் மெக்னீசியம் சல்பேட் பெண்டனைட் சல்பர் பொட்டாஷியம் நைட்ரேட் கால்சியம் அமோனியம் நைட்ரேட் போன்ற உரங்கள் விற்பனை பற்றியும், இதில் கலந்துகொண்ட உதவி பகுதி மேலாளர் ரகுபதி ராஜா, உரங்கள் முறையாக பயன்படுத்தின விதத்தினையும் அதை எவ்வாறு மண்ணில் அளிக்க வேண்டும் என்பதைப் பற்றியும் தெளிவாக எடுத்துரைத்து nfl நிறுவனத்தின் முக்கியத்துவத்தை, சென்னை உட்கோட்டத்தில் அமையப்பெற்று இருக்கும் தேசிய உர நிறுவனத்தின் உரங்களை பயன்படுத்த யூரியா, டி.ஏ.பி, பொட்டாஷ், இணைப்பு உரமான 20:20:0:13, 10:26:26, நீரில் கரையும் உரங்கள் 19:19:19, மற்றும் 13:0:45, 12:61:9,0:52, 34

மோனோபொட்டாஸ்ஸியம் பாஸ்பாட், மக்நீசியம் பஸ்பாட், கால்சியம் நைரேட் உர பயன்கள் பற்றியும், கடல் பாசி உரம், கிசான் சாகர் ரத்னா, மொலசில் இருந்து பெறப்பட்ட பொட்டாஷ் உரம், நொதிக்கப்பட்ட இயற்கை உரம் பற்றி விரிவாக எடுத் துரைத்தனர். உதவி பேராசிரியர் முனைவர் காயத்திரி, இயற்கை சுற்று சூழல் பாதுகாப்பு பற்றி விளக்கினார். விகடகவி உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர்கள், உறுப் பினர்கள் கிருஷ்ணமூர்த்தி மற்றும் ராமசந்திரனால் விவ சாயிகள் ஒருங்கிணைக்கப்பட்டனர். பயிற்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டது.

**வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்**



# கெர்போட்ட ஆரம்பம் பற்றி தெரியுமா?

தினசரி காலண்டரின் தேதியை (29.12.24) ஞாயிற்றுக் கிழமை கிழிக்கும் போது அந்த தாளில் 'இன்று கெர்போட்டம் ஆரம்பம்' என்று எழுதப்பட்டுள்ள வரியை படித்தவுடன் தான் இதுபற்றி எனக்கு தெரிந்த தகவல்களை உங்களுடன் பகிரவே இந்த பதிவை பதிவிடுகிறேன். அதேபோல தோராயமாக 14 நாட்களில் கழித்து 'கெர்போட்ட நிவர்த்தி' என்ற வரியும் காலண்டர் தாளில் உள்ளது. இது என்ன? என்பதை பற்றியை தான் பார்ப்போம்.

**கெர்போட்டம்**

நம்முடைய முன்னோர்கள் ஆய கலையில் வல்லவர்கள் தான். இந்த தனூர் மாதத்தில் (மார்கழியில்) மழைக்கான கரு ஓட்டத்தை வைத்தே அடுத்த ஆண்டில் பருவமழை எப்படி இருக்கும் என்பதை கணித்து வானிலை சாஸ்திர அடிப்படையில் தான் இதனை குறிப்பிடுகின்றனர்.

**என்ன ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? கரு ஓட்ட சூழற்சி எதன் அடிப்படையால் ஆனது?**

கரு ஓட்டம் என்பதே கரப்ப ஓட்டமாகி இன்று கெர்ப்போட்டமாக மருவி வருகிறது.

நம்முடைய முன்னோர்கள் சூரியனின் சூழற்ச்சியை அடிப்படையாக கொண்டு வானியில் 27 நட்சத்திர மண்டலங் களாகவும், 12. ராசி மண்டலங்களாகவும் பிரித்து உள்ளனர்.

தனூர் மாதம் எனப்படும் மார்கழியில் சூரியன் தனூர் ராசி மண்டலத்தை கடக்கும் போது பூராட நட்சத்திரத்தை அடைய 14 நாட்களை எடுத்துக் கொள்கிறது. அந்நாட்களில் 'கரு மேகங்கள் தெற்கு நோக்கி நகர்வதை காணலாம். அந்த 14 நாட்களும் கர்போட்ட நாட்களாகும். மழையை கருக் கொள்ளும் நாள் அல்லது மேகம் சூலாகும் நாள். இதனை பெண்ணின் 10 மாத கர்ப்ப காலத்துடன் ஒப்பிட்டு பாருங்க. அதே போல மேகம் கரு கொண்டு மழை வர அடுத்த ஆண்டில் 10 மாதம் கழித்து மழையை பாருங்க. இந்த கெர்போட்ட நாட்களில் மழையை முறையாக சூல் கொண்டால் ஒன்பது

மாதம் கழித்து அடுத்த ஆண்டில் (2025) ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் மானாவாரியாக விதைப்பு செய்ய பயனுள்ளதாக இருக்கும்.

**பொதுவாக கெர்போட்ட நாட்கள் எந்த தேதியில் வரும் தெரியுமா?**

இந்த நாட்கள் தோராயமாக டிசம்பர் 29 முதல் ஜனவரி 12 வரை வரலாம். இந்த ஆண்டில் டிசம்பர் 29ல் வந்துள்ளது.

**எப்போது தொடங்கும்?**

மார்கழி மாதம் அமாவசை முடிந்து ஒரு வாரத்தில் தொடங்கி அடுத்த வரும் 14 நாட்களும் ‘ கர்போட்ட நாட்கள்‘ என்பதை நினைவில் வைத்திருக்கவும்.

**இந்த நாட்களில் மழை உண்டா?**

இந்த நாட்களில் லேசான தூறல், மெல்லிய சாரல், போன்ற மழை இருந்தால் மேகம் கரு கட்டி இருக்கிறது என்று பொருள். எனவே அடுத்த ஆண்டில் நல்ல மழையை எதிர்பார்க்கலாம். இந்த நாட்களில் பெய்கின்ற லேசான மழையை வைத்து கணிக்க முடியும். அதற்கு நேர்மாறாக கர்போட்ட நாட்களில் கனமழை பெய்து சூறைக்காற்று விசினாலோ அல்லது கடும் வெயில் இருந்தாலோ, மேகத்தின் மழைக்கான கரு கலந்து விட்டது என்று பொருள். எனவே மார்கழியில் கன மழை பெய் தால் அடுத்த ஆண்டில் எதிர்பார்த்த மழை வருமா? என்பது கேள்விக்குறியாக இருக்கும்/ மழை பொய்க்கும். இன்றைய காலசூழ்நிலையில், மாறுபட்ட பருவநிலை மாற்றமும் மேகத்தின் கருக்கலைக்கும் வில்லன்களாக உருவாகி இருப் பதால் தான் ஒவ்வொரு ஆண்டும் மழையின் வீரியம், அளவு குறைகிறது.

**இது எந்த வகையில் விவசாயிகளுக்கு உதவும்?**

இந்த கால கணிப்பை வைத்து மானாவாரி விவசாயிகள் மழையின் அளவை வைத்து பயிர்களை தேர்வு செய்து சாகுபடி செய்வார்கள். இது மழைக்கான கருத்து கணிப்பாக இருக்கும், இந்த கெர்ப்போட்ட நாட்கள். இதிலிருந்து தமிழர்களின் வானிலை அறிவு எப்படிபட்டது என்பதை நாம் நினைத்து பார்க்கும்போது புல்லரிக்க வைக்கிறது.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்



# தினையில் புதிய இரகம் மற்றும் அதன் சிறப்பியல்புகள்

தினை - அத்தியேந்தல் (ATL) -2 என்ற இரகம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் 2024ஆம் ஆண்டு புதிதாக வெளியிடப்பட்டுள்ளது.

பெற்றோர் : கோ 6 மு ஜஎஸ்இ 198

வயது : 80-85 நாட்கள்.

**சிறப்பியல்புகள்**

- இந்த ரகமானது பருமனான தானிய மணிகளை கொண்டது.




- தானிய மணிகள் சிதறி கொட்டாது. இதனால் மகசூல் பாதிப்பு ஏற்படாது.
- 12.3% புரத சத்தைக் கொண்டுள்ளது.
- குலை நோய். இலைப் புள்ளி நோய் மற்றும் துரு நோய்களுக்கு எதிர்ப்புத்திறன் கொண்டது.
- தானிய மகசூல் - 2174 கிலோ/எக்டர்
- உலர்ந்த தட்டை மகசூல் -2688 கிலோ/எக்டர்

இதனை, சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அ .சாகுல் அமீத் தெரிவித்தார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**



கறம்பகுடி உழவர் சந்தையில் காய்கறி விற்பனையினை மேம்படுத்தும் விதமாக புதுக்கோட்டை மாவட்டம், மலையூர் கிராமத்தினை சார்ந்த விவசாயி சி.முத்துகுமாக்கு, மாவட்ட வேளாண் வணிகம் மற்றும் விற்பனை துறையின் துணை இயக்குநர் ரா.ஜெகதீஸ்வரி உழவர் சந்தை அடையாள அட்டையை வழங்கினார். கறம்பகுடி உழவர் சந்தையின் வேளாண்மை உதவி அலுவலர் எஸ்.விக்னேஸ்வரி உடன் இருந்தார்.



# வேளாண் அடுக்ககம் [Agri Stack] திட்டத்தில் விவசாயிகளின் தரவுகள் சேகரிக்கும் பணி ஜனவரி 2ம் தேதி துவக்கம்

விருதுநகர், டிச.31

விருதுநகர் மாவட்டம், நரிக்குடி வட்டாரத்தில் வேளாண் அடுக்ககம் திட்டத்தின் கீழ் விவசாயிகளின் ஒருங்கிணைந்த தரவு அடுக்கு உருவாக்கும் பணி வேளாண்மை துறையினரால் மேற்கொள்ளப்பட உள்ளது.

இது குறித்து நரிக்குடி வேளாண்மை உதவி இயக்குனர் தெரிவிக்கையில், இத்திட்டத்தில் முதல்கட்டமாக விவசாயிகளின் தரவுகள் சேகரிக்கும் பணியினை மேற்கொள்வதற்கு வேளாண்மைத் துறை மற்றும் சகோதரத் துறையில் உள்ள அனைத்து அலுவலர்கள் மற்றும் மகளிர் திட்டத்தில் கிராம அளவில் பணியாற்றக்கூடிய கிராம அளவிலான சமுதாய பயிற்றுநர்களையும் ஒருங்கிணைத்து பயிற்சி நடத்தப்பட்டுகிறது.

இந்த வேளாண் அடுக்ககம் திட்டத்தில் நில விவரங்களுடன் விவசாயிகள் பதிவு விபரம் மற்றும் நில உடமை வாரியாக புவிசார்பு குறியீடு செய்த பதிவு விவரம் மற்றும் நில உடமை வாரியாக மின்னணு பயிர் பதிவு விவரங்கள் மேற்கொள்ளப்பட உள்ளது.

இந்தத் திட்டமானது ஒன்றிய வேளாண் அமைச்சகத்தின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி மாநிலம் முழுதும் செயல் படுத்தப்பட உள்ளது. மின்னணு முறையில் விவசாயிகளின் தரவுகள் சேகரிக்கப்பட்டு மாநிலத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் ஆதார் எண் போன்று விவசாயிகளுக்கு என தனித்துவமான அடையாள எண் வழங்கப்பட உள்ளது.

விவசாயிகளின் ஒப்புதல் பெறப்பட்ட பின்னரே விவசாயிகளின் தரவுகள் சேகரிக்கப்பட்டு அடையாள எண் வழங்கப்படும். இனிவரும் காலங்களில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் அனைத்து திட்ட பலன்களும் விவசாயிகளின் தரவுத்தளம் அடிப்படையிலேயே வழங்கப்படும். தன் மூலம் அனைத்து துறை பயன்களையும் மானியங்களையும் ஒற்றைச் சாளர முறையில் விவசாயிகள் பெற்று பயன்பெறலாம்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக, (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

விவசாயிகள் அரசு திட்டங்களில் பயன்பெற விண்ணப்பிக்கும் போது ஒவ்வொரு முறையுமா அது தொடர்பான ஆவணங்களை சமர்ப்பிக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை. அரசின் நன்மைகள் மற்றும் மானியங்கள் சரியான பயனாளிக்கு சென்றடைவதை உறுதிப்படுத்திட முடியும். விவசாயிகள் நேரடியாக வலைதளத்தில் பதிவு செய்வதால் முன்னுரிமை அடிப்படையில் அரசின் பயன்களை பெற்றுக் கொள்ளலாம். ஆதார் எண் அடிப்படையில் விவசாயிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடி பணப் பரிமாற்றம் செய்யப்படும்.

கூட்டுறவு மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் எளிய முறையில் பயிர் கடன் பெற இயலும். விவசாயிகள் இதுவரை அரசிடமிருந்து பெற்ற நன்மைகள் மற்றும் மானியங்களின் விபரங்களை தெரிந்து கொள்ளலாம். இனிவரும் காலங்களில் பாரத பிரதமரின் கௌரவ நிதி வழங்கும் திட்டம் மற்றும் பயிர் காப்பீட்டு திட்டம் போன்ற ஒன்றிய மற்றும் மாநில அரசு திட்டங்கள் அனைத்தும் இந்த தரவுகளின் அடிப்படையிலேயே வழங்கப்படும். தமிழ்நாட்டில் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த திட்ட பலன்களை வழங்கும் சுமார் 24 துறைகளை ஒன்றிணைத்து இந்த பணி மேற்கொள்ளப்பட உள்ளது.




எனவே நரிக்குடி வட்டாரத்தைச் சேர்ந்த அனைத்து விவசாயிகளும் தங்கள் நில உடமை மற்றும் தங்களது சுய விபரங்களை தங்களது கிராமங்களில் தரவு சேகரிக்கும் முகாம்கள் நடைபெறும் நாட்களில் நில ஆவணங்கள் மற்றும் இதர ஆவணங்களை எடுத்துச் சென்று வேளாண்மைத் துறை அலுவலர்கள் மற்றும் மகளிர் திட்ட பணியாளர்களிடம் பதிவு செய்து பயன்பெற நரிக்குடி வேளாண்மை உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# ஒருங்கிணைந்த பண்ணையத்தில் மதிப்பு கூட்டல் - ஓர் பார்வை



ஒருங்கிணைந்த பண்ணையம்/ ஒருங்கிணைந்த வேளாண்மை விவசாயத்துக்கான நிலப்பரப்பு நாளுக்குநாள் குறுகிக் கொண்டே வருகிறது. எனவே விவசாய உற்பத்தியில் தன்னிறைவு அடையும் பொருட்டு முற்றிலும் ஒரு புதிய அணுகுமுறை தேவைப்படுகிறது. இப்புதிய அணுகு முறையே ஒருங்கிணைந்த பண்ணையமாகும். நவீனகருவிக மற்றும் தொழில் நுட்பங்களை ஒரு குறிப்பிட்ட இடம், சூழ்நிலைக்கு ஏற்ப பாரம்பரிய நடைமுறைகளுடன் ஒருங் கிணைத்து, பெரும்பாலும் குறுகிய இடத்தில் பல சாகுபடி நுட்பங்களைப் பயன்படுத்தி நிலையான சிறந்த பலனைப் பெற ஒருங்கிணைந்த பண்ணையம் உதவுகிறது. மாடு வளர்ப்பு (பால் பண்ணை), ஆடு வளர்ப்பு, மீன் வளர்ப்பு, கோழி வளர்ப்பு,தேனீ வளர்ப்பு, வேளாண் காடுகள் வளர்ப்பு மற்றும் சாண எரிவாயு போன்ற வற்றை விவசாயத் தொழிலோடு தொடர்புபடுத்தி விவசாயத்தை இலாபகரமான தொழிலாக மாற்றுவதற்கு ஒருங்கிணைந்த வேளாண்மை உதவும்.

**ஒருங்கிணைந்த பண்ணையம் என்றால் என்ன?**

வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த இணைத் தொழில்களை சூழ்நிலைக்கேற்ப தேர்ந்தெடுத்து மேற்கொள் வதை ஒருங்கிணைந்த பண்ணையம் என்று கூறலாம். சர்வதேச உயிரியல் கட்டுப்பாட்டு அமைப்பு (IOBC) UNI 11233-2009 ஐரோப்பிய தரத்தின்படி ஒருங்கிணைந்த வேளாண்மையை கீழ்வருமாறு வரைவிலக்கணப்படுத்துகிறது. இயற்கையுடன் கூடிய மண், நீர், காற்று போன்ற வளங்களைப் பயன்படுத்தி, நிலையான உற்பத்தி தரக்கூடியவாறு காரணிகளை ஒழுங் கமைத்து, மிகக் குறைந்தளவு மாசுபடுத்தும் உள்ளீடுகளின் பயன்பாட்டுடன் உயர்தர கரிம உணவு, தீவனம், நார் மற்றும்


Rithvik® Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS 4985 : 2021
IS : 4985
IS 9537
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

புதுப்பிக்கத்தக்க ஆற்றல் ஆகியவற்றை உற்பத்தி செய்வதே ஒருங்கிணைந்த பண்ணையம் அல்லது ஒருங்கிணைந்த வேளாண்மையாகும்.

விவசாயத்தையே முக்கியமான தொழிலாகக் கொண்ட நமது நாட்டில் மொத்த நிலப்பரப்பில் எழுபது சதவிகிதம் மானா வாரியாக சாகுபடி செய்யப்படுகிறது. மானாவாரியாக சாகுபடி செய்யும் விவசாயிகளும், ஒன்று அல்லது இரண்டு ஏக்கர் நிலமுள்ள சிறு விவசாயிகளும், நடுத்தர விவசாயிகளும் ஆண்டு முழுவதும் விவசாயத் தொழிலை மட்டுமே நம்பி இருக்க முடிவதில்லை. இயற்கையின் விளைவுகளாலும் மற்ற சந்தர்ப்ப சூழ்நிலைகளாலும் இவர்களால் விவசாயத்தை எப்போதும் வெற்றிகரமாக செய்ய இயலுவதில்லை. இதனால் லாபத்தை விட நஷ்டம் தான் அதிகமாக ஏற்படுகிறது. இந்நிலை மாற வேண்டுமானால் வேளாண்மையில் ஒருங்கிணைந்த பண்ணை நிறுவுவது மிகவும்அவசியமாகிறது. வேளாண்மையில் ஆண்டு முழுவதும் தொடர்ந்து இணைத்தொழில் மேற்கொள்வதன் மூலம் சுயவேலை வாய்ப்பும், வருமானமும் தொடர்ந்து கிடைப்ப தால் விவசாயிகளின் பொருளாதாரம் மற்றும் வாழ்வாதாரம் உயரும்.

## குறிக்கோள்கள்

பண்ணையத்தின் மொத்த வருமானத்தை அதிகரித்தல், ஆண்டு முழுவதும் தொடர்ந்து வருமானத்துக்கு வழி ஏற்படுத்துதல், விவசாயத் தொழிலாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு அளித்தல், பண்ணைப் பொருட்கள், பண்ணைக் கழிவுகளை சிறிய முறையில் சுழற்சி செய்தல், பண்ணையிலிருந்து கிடைக்கும் கழிவுப் பொருள்களை மீண்டும் வயலில் இட்டு நிலத்தின் வளம், மகசூலைப் பெருக்குவதோடு, உரச் செலவுகளைக் குறைப்பது போன்றவை.

## அடிப்படைத் தத்துவங்கள்

ஒருங்கிணைந்த பண்ணை முறையில் பண்ணைத் திட்டம் வகுக்கும் போது நன்செய், தோட்டக்கலை, புன்செய் நிலங் களுக்கு ஏற்ற பயிர்த் திட்டத்தை அமைத்தல் வேண்டும். பின்பு அந்தப் பயிர்த் திட்டத்துக்கு ஏற்ப பொருளாதார ரீதியில் பலன் தரக்கூடிய ஒன்று அல்லது இரண்டு உபதொழில்களை தேர்ந்தெடுக்க வேண்டும். தேர்ந்து எடுக்கும் உபதொழில்கள் ஒன்றை ஒன்று சார்ந்து இருக்க வேண்டும்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

அவ்வாறு ஒருங்கிணைக்கப்பட்ட உப தொழில்களுக்குத் தேவையான இடுபொருள்கள் அந்தப் பண்ணையிலேயே உற்பத்தி செய்ய வேண்டும். உபதொழிலுக்கு ஏற்ற இடுபொருள்கள் போதவில்லையெனில் அதற்கேற்றவாறு பயிர்த் திட்டத்தை மாற்றியமைக்க வேண்டும்.

மேலும் ஒரு உப தொழிலிருந்து கிடைக்கும் கழிவுப் பொருள்களை மற்றொரு உபதொழிலுக்கு இடுபொருளாக இருக்குமாறு உபதொழில்களைத் தேர்ந்து எடுக்க வேண்டும். பண்ணையில் விளையும் அல்லது தங்கள் ஊரில் கிடைக்கும் தானியங்களைக் கொண்டே தீவனக் கலவை தயார் செய்தல் வேண்டும். அப்போது தான் உபதொழில்களுக்கு ஆகும் உற்பத்தி செலவு குறைந்து அதிக லாபம் பெறலாம்.

ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டத்தில் பயிர் சுழற்சியால் முதல் போகத்தில் நெல் பயிரிட்டு, இரண்டாம் போகத்தில் பயிறு, மூன்றாம் போகத்தில் பயிறு சாகுபடிக்கு மாற்றாக மக்காச்சோளம் ஆகியவற்றைப் பயிரிடலாம்.

**ஒருங்கிணைந்த பண்ணைய தொழில்நுட்ப கூறுகள் /அலகுகள்**

ஒருங்கிணைந்த பண்ணையத்தில் பல்வேறு விதமான தொழில்நுட்பக்கூறுகள் ஒருங்கிணைந்து பயன்படுத்தப்படுகிறது. முக்கியமாக விவசாயத்துடன் சேர்ந்து தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு மற்றும் அதனைச் சார்ந்த பிற உப தொழில்களின் தொழில்நுட்ப கூறுகள் பயன்படுத்தப்படுகிறது.

**விவசாயம்**

ஒருங்கிணைந்த பண்ணயத்தில் விவசாயம் ஒரு முக்கிய தொழில்நுட்பக் கூறு ஆகும். விவசாயத்தில் முக்கியமாக நெல் வளர்ப்பு, உளுந்து, பயிர் வளர்ப்பு மற்றும் நெல்லுடன் கூடிய மீன் வளர்ப்பு ஆகியவை பயன்படுத்தப்படுகிறது.

**தோட்டக்கலை**

தோட்டக்கலை பயிர்களில் முக்கியமாக வாழை, மா மற்றும் காய்கறி பயிர்கள் ஆகியவை வளர்க்கப்படுகின்றன.

**கால்நடை வளர்ப்பு**


கால்நடை வளர்ப்பில் முக்கியமாக ஆடு வளர்ப்பு, மாடு வளர்ப்பு, புறக்காடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு மற்றும் வாத்து

வளர்ப்பு ஆகியவை ஒருங்கிணைந்த பண்ணையத்தில் செயல் படுத்தப்படுகின்றன.

**மீன் வளர்ப்பு**

ஒருங்கிணைந்த பண்ணையத்தில் மீன் வளர்ப்பு ஒரு முக்கியமான தொழில்நுட்ப கூறு ஆகும். மீன் வளர்ப்பில் முக்கியமாக கூட்டுமீன் வளர்ப்பு, ஜிலேபி மீன் வளர்ப்பு மற்றும் நாட்டுக் கெண்டை மீன் வளர்ப்பு ஆகியவை செயல்படுத்தப்படுகின்றன. மீன் வளர்ப்பு குளத்தின் கரைகளில் தோட்டக்கலை பயிர்கள் வளர்க்கப்பட்டு ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படுகின்றன.

**ஒருங்கிணைந்த பண்ணையை விலை பொருட்களில் மதிப்பு கூட்டல்**




**விவசாய விளை பொருட்கள்**

நெல், பாரம்பரிய நெல் ரகங்கள், உளுந்து, பயிர் வகை பயர்கள், எண்ணெய் வித்துக்கள் ஆகியவை நமக்கு விலை பொருட்களாக கிடைக்கும். இத்தகைய விவசாய விளைப் பொருட்களில் முக்கியமாக பாரம்பரிய நில ரகங்களில் பல்வேறு விதமான மதிப்பு கூட்டப்பட்ட பொருட் களான பாரம்பரிய நெல் ரகங்களின் கஞ்சி, பாயாசம், முறுக்கு, அடை, அதிரசம், பாரம்பரிய சத்து மாவு, நூடுல்ஸ் மற்றும் பாஸ்தா செய்து அவற்றை லாபகரமாக சந்தை படுத்த முடியும். நெல்லில் இருந்து மூன்று வெவ்வேறு விதமான மதிப்பு கூட்டப்பட்ட பொருட் களான நொதிந்த அரிசி பொருட்கள், பதப்படுத்தப்பட்ட அரிசி பொருட்கள் மற்றும் முறுக்கி பிழியப்பட்ட அரிசி பொருட்கள் ஆகிய வற்றை செய்து சந்தை படுத்த முடியும். நொதித்த அரிசி பொருட் களான இட்லி, தோசை மற்றும் கஞ்சி பதப்படுத்தப்பட்ட அரிசி பொருட்களான பொரி, ஊற வைத்த அரிசி பொறி, மசாலா அரிசி பொறி மற்றும் அவுல் மற்றும் முறுக்கி பிழியப்பட்ட அரிசி பொருட் களான இடியாப்பம், முறுக்கு, நூடுல்ஸ் மற்றும் பாஸ்தா ஆகியவை செய்து அவற்றை லாபகரமாக சந்தை படுத்த முடியும். எண்ணெய்-வித்து பயர்களில் இருந்து பல்வேறு விதமான எண்ணெய்களை இயற்கை முறையில் எடுத்து மதிப்பு கூட்டல் செய்து விற்பனை செய்வதோடு அவற்றிலிருந்து வரக்கூடிய புண்ணாக்குகளை கால்நடை ஆடு மாடுகளுக்கு தீவனமாக பயன்படுத்துவதோடு அவற்றையும் விற்று லாபகரமாக சந்தை படுத்த முடியும்.

**தோட்டக்கலை பயிர்கள்**

பல்வேறு விதமான தோட்டக்கலை பயிர்களை ஒருங்கிணைந்த பண்ணையத்தில் வளர்த்து மதிப்பு கூட்டல் செய்து அதனை ஒரு

லாபகரமான தொழிலாக நாம் செய்ய முடியும். உதாரணமாக காய்கறிகளில் இருந்து பல்வேறு விதமான வத்தல்கள் குறிப்பாக கத்திரிக்காய் வத்தல், மாங்காய் வத்தல், கொத்தவரங்காய் வத்தல், வெண்டைக்காய் வத்தல் மற்றும் மணத்தக்காளி வத்தல் செய்ய முடியும். காய்கறி வகைகளில் இருந்து பல்வேறு விதமான ஊறு காய்கள், தொக்கு மற்றும் பழங்களிலிருந்து பழ சாறுகள், ஜாம், சாஸ்கள், இனிப்பு மிட்டாய்கள், புளிப்பு மிட்டாய்கள் மற்றும் பல்வேறு விதமான பொடி வகைகள் செய்து தோட்டக்கலை பயர்களை நல்ல முறையில் மதிப்பு கூட்டி சந்தை படுத்த முடியும்.

### கால்நடை பொருட்கள்

ஒருங்கிணைந்த பண்ணையத்திலிருந்து நமக்கு கிடைக்கக்கூடிய பல்வேறு விதமான கால்நடை பொருட்கலிருந்து வெவ்வேறு வித மான மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை செய்து அதனை ஒரு லாபகரமான உபத் தொழிலாக நாம் செய்ய முடியும். முக்கியமாக பால் மற்றும் பால் சார்ந்த பொருட்களான தயிர், மோர், வெண்ணை, நெய், பாலாடை கட்டி, பன்னீர், யோகர்ட், ஐஸ்கிரீம் மற்றும் ரசகுல்லா என பல்வேறு விதமான பால் சார்ந்த மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் செய்ய முடியும். கால்நடையில் இருந்து கிடைக்கக்கூடிய இறைச்சி யில் இருந்து பல்வேறு விதமான மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களான பிரியாணி, மந்தி, ஊறுகாய் வகைகள்,ரோல்ஸ், பப்ஸ் மற்றும் லாலிபாப் என பல்வேறு விதங்களில் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் செய்து அவற்றை லாபகரமான தொழிலாக மாற்ற முடியும்.

### மீன் சார்ந்த பொருட்கள்

ஒருங்கிணைந்த பண்ணையத்தில் நமக்கு கிடைக்கக்கூடிய மீன் கலிருந்து பல்வேறு விதமான மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களான மீன் ஊறுகாய், மீன் தொக்கு, மீன் கறி, மீன் கேக், மீன் பிஸ்கட், மீன் நூடுல்ஸ், மீன் பாஸ்தா, உலர் மீன்கள், மீன் சட்னி பொடி, மீன் பாப்ஸ், மீன் ரோல்ஸ், மீன் சமோசா, மீன் பஜ்ஜி, மீன் பக்கோடா மற்றும் மீன் 65 என எண்ணிலடங்கான மதிப்பு கூட்டப்பட்ட பொருட் கள் செய்து அவற்றை லாபகரமான தொழிலாக மாற்ற முடியும்.

தகவல் : **முனைவர் ஆ.மதிவாணன் மற்றும் செ.அனிதா, தொழில்நுட்ப வல்லுநர் (மனையியல்), வேளாண்மை அறிவியல் நிலையம், சிக்கல், நாகப்பட்டினம்.**

மேலும் விபரங்களுக்கு முனைவர் ஆ.மதிவாணன், தொழில்நுட்ப வல்லுநர் (மனையியல்), வேளாண்மை அறிவியல் நிலையம், சிக்கல், நாகப்பட்டினம், தொலைபேசி எண் : 04365-299806 மின்னஞ்சல் : kvksikkal@tnfu.ac.in தொடர்பு கொள்ளலாம்.